**சுருக்கம்**

வேளாண்மை – உழவர் நலம் – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்- 2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிக்குளம் வேளாண்மைக் கல்லூரியில் பனைக்கென தனி ஆராய்ச்சி நிலையத்தினை அமைக்க நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (ப.க) துறை**

அரசாணை (நிலை) எண்.167 நாள்: 28.07.2023

திருவள்ளுவர் ஆண்டு 2054,
சோபகிருது வருடம்,
ஆடித் திங்கள் – 12 ஆம் நாள்

படிக்க-

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகப் பதிவாளர் அவர்களது கடித எண். TNAU/ Agriculture Budget Announcement (2023-2024) / 2023, நாள் 21.04.2023, 27.05.2023, 03.06.2023 மற்றும் 05.07.2023.

**ஆணை:**

2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

**35.பனை மேம்பாட்டு இயக்கம்:**

**ஆ) பனை ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்:**

கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் குறுகிய காலப் பனை இரகங்களை உருவாக்குதல், மதிப்புக்கூட்டுதல் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு மேலும்

முக்கியத்துவம் அளித்து புதிய குட்டை ரக பனை மரங்களை உருவாக்கி அவற்றின் நடவுப்பொருட்களை கிடைக்கச்செய்வது, நடவு, ஊட்டச்சத்து, நீர் மேலாண்மை ஆகியவற்றுக்கான வழிமுறைகளை நெறிப்படுத்துவது, நீரா, பனை வெல்லம், பனங்கற்கண்டு போன்ற பனை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களின் தரத்தினை ஆய்வதற்கான தர ஆய்வுக்கூடம் அமைத்தல், மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பங்களை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு, தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் பனைக்கென தனி ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும். இதற்கென 15 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

2. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளரது மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் பனைக்கென தனி ஆராய்ச்சி நிலையம் அமைக்க கருத்துருவினை அரசுக்கு அனுப்பியிருந்தார்:-

<u>அ) திட்டத்தின் அடிப்படை :</u>

பனை உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் தொழில் நாட்டின் உணவுப்பாதுகாப்பு, வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிசெய்கிறது. பனைமரம், வறண்ட நிலங்களில் வறட்சியைத் தாங்கி, குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு குறைந்த பராமரிப்பில் வளர்ந்து, பல்வேறு பயன்பாடுகளை விவசாய சமூகத்திற்கு அளிக்க ஏற்ற மரமாகும். உலகில் அதிக எண்ணிக்கையிலான பனைமரங்கள் (85.9 மில்லியன்) இந்தியாவில் உள்ளன, இதில் 60% தமிழ்நாட்டில் (51 மில்லியன்) உள்ளன. தமிழ்நாட்டில் தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மொத்தம் 7870 ஹெக்டேர் பரப்பளவில் பனைமரங்கள் அதிக அளவில் உள்ளன. இதன் பின்னணியில், தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளத்தில் பனை மரபணுத் தொகுப்பு

நிறுவுதல், குட்டை மரத்திற்கான மரபணு வகைகளை கண்டறிதல், முன்கூட்டியே பூக்கும் தன்மையைத் தூண்டுதல், மதிப்புகூட்டுதல் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மூலம் சந்தைப்படுத்துதல் போன்றவற்றிற்காக பனை ஆராய்ச்சி நிலையம் அமைக்க ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ) திட்டப் பின்னணி :

பனை மரங்கள் மெதுவாக மற்றும் 12-18 மீட்டர் உயரம் வரை வளரும் தன்மையுடையவையாகும். ஆனால், மரம் ஏறி பழங்களை அறுவடை செய்வது மற்றும் 'பதநீர்' சேகரிப்பதற்கு விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும், பனைமரங்கள் பூப்பதற்கும், காய்ப்பதற்கும் 13 - 15 ஆண்டுகள் வரை ஆகும். எனவே, குட்டை பனைமரங்களை கண்டறிந்து தேர்ந்தெடுத்து புதிய வகைகளை உருவாக்குதல், தகுந்த பனைமரம் ஏறும் கருவியை தயாரிப்பதே, தற்போதைய தேவை. கூடுதலாக, பனை சார்ந்த பொருட்களின் மதிப்புக்கூட்டல் மற்றும் அதனுடன் தொடர்புடைய மதிப்புச்சங்கிலியும் இன்றியமையாததாகும்.

மேலும், பனை மரமானது ஆண் மரம், பெண் மரம் என இருவகையாக காணப்படும். இது 10 ஆண்டுகளில் 15 அடி வரை வளரும். 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான் பூக்கும் பருவம் ஏற்படுகிறது. எனவே, பனை விளைபொருட்களை அறுவடை செய்ய பெண் மரத்தை அடையாளம் காண்பதற்கு நீண்டகாலம் எடுக்கும். எனவே, குட்டை இரக மரபணு வகைகளை அடையாளம் கண்டறிவதும் முன்கூட்டியே பூக்கும் தன்மையை தூண்டுவதும் பனை விவசாயிகளுக்கு அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கிறது.

இ) திட்டத்தின் குறிக்கோள்கள் :

- தேசிய அளவிலான பனை மரபணுத்தொகுப்பு தளம் அமைத்தல், பாதுகாத்தல் மற்றும் பண்பு அளவிடுதல்.
- குறுகிய காலத்தில் உயர்விளைச்சல் (பழங்கள் மற்றும் பதநீர்) தரக்கூடிய குட்டை இரகங்களைக் கண்டறிதல்.
- சாகுபடி தொழில்நுட்பங்கள் முறையே நடவு முறை, நீர் மற்றும் உர மேலாண்மை, பயிர் பாதுகாப்பு உத்திகளை மேம்படுத்துதல்.

- பதநீர் மற்றும் பனைசார் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் முறையே கருப்பட்டி, பனங்கற்கண்டு மற்றும் மிட்டாய் போன்றவற்றில் தரப் பரிசோதனைக்கான தரக் கட்டுப்பாடு ஆய்வகம் அமைத்தல்.
- அறுவடை பின்சார் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் மதிப்புகூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு வாயிலாக உள்ளூர் மற்றும் வெளிநாடு வணிக சந்தைக்கான வாய்ப்பினை மேம்படுத்துதல்.

ஈ) திட்ட காலம் :

மூன்றுஆண்டுகள்

உ) திட்டத்தின் செயல்பாடுகள் :

1. தேசிய அளவிலான பனை மரபணுத்தொகுப்பு தளம் அமைத்தல், பாதுகாத்தல் மற்றும் பண்பு அளவிடுதல்.
2. உயர்தொழில்நுட்ப பனை நாற்றங்கால் அமைத்தலுடன் கூடிய நிலம் தயாரித்தல்.
3. விவசாயிகளுக்கு தரமான நாற்றுகள் பெருமளவில் உற்பத்தி செய்து வழங்குதல்.
4. பனைமரப் பொருட்களைப் பன்முகப்படுத்துவதற்கும் மதிப்பு கூட்டுவதற்கும் உயர்தொழில் நுட்பங்களுடன் கூடிய பனை பதப்படுத்தும் உபகரணங்களுடன் ஆய்வகம் அமைத்தல்.
5. பாலின நிர்ணயத்திற்கு பனை நாற்றுகளின் மூலக்கூறு பண்புகளை மரபணு தொழில்நுட்பம் மூலம் கண்டறிதல் மற்றும் மேம்படுத்துதல்.
6. அதிகமான பதநீர் மற்றும் பழங்களின் விளைச்சலுக்காக பனை மரத்தில் குட்டைத் தன்மையையும் தொடர்ச்சியாக பூக்கும் தன்மையையும் தூண்டுதல்.
7. பனை உற்பத்தியை அதிகரிக்க உழவியல் முறைகளான மரங்களின் இடைவெளி, வாழ்வியல், நீர் பாசன முறை, சொட்டு நீர் பாசனத்துடன் கூடிய உரமிடல் மற்றும் மூலக்கூறு பண்புகளைக் கண்டறிதல்.
8. மலிவான மற்றும் எளிதில் பயன்படுத்தக்கூடிய பனை மரம் ஏறுவதற்கான உபகரணங்களை வடிவமைத்தல்.
9. பதநீரின் சேமிப்பு காலத்தினை அதிகரிக்க நடமாடும் மற்றும் நிரந்தர குளிர்சாதன வசதிகளை உருவாக்குதல்.

10. FSSAI பரிந்துரைப்படி பனைமரப் பொருட்களுக்கு தரம் நிர்ணயித்தல்.
11. பனை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களுக்கு காப்புரிமை மற்றும் புவிசார் குறியீடு பெறுதல்.
12. பனைப் பொருட்களுக்கான பிரத்தியேக உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பினை உருவாக்குதல்.
13. பனைசார் மதிப்புக்கூட்டுதலில் தொழில்முனைவோரை ஊக்கப்படுத்துதல்.

ஊ) பயனாளிகள் :

இத்திட்டத்தின் பயனாளிகள் விவசாயிகள், விரிவாக்கத் தொழிலாளர்கள், தொழில்முனைவோர், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பு மற்றும் பனைத் தொழிலாளர்கள் ஆவர்.

எ) திட்டத்தின் பயன்கள்:

- விவசாய சமூகத்திற்கு அதிக மகசூல் தரும் குட்டை இரக பனை வகைகள் கிடைக்கப் பெறுதல்.
- பனை விவசாயிகளுக்கு மேம்படுத்தப்பட்ட வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் பனையின் சாகுபடி பரப்பளவு அதிகரிக்க செய்தல்.
- பதனீர் பதப்படுத்துதல், மதிப்பு கூட்டுதல், சேமிப்பு மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.
- பனைபொருட்களுக்கு சிறந்த விலை மற்றும் லாபம் கிடைக்கப்பெற்று விவசாயிகளை பயனடைய செய்தல்.
- புதுமையான உணவு பதப்படுத்துதல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வை விவசாயிகளுக்கு ஏற்படுத்துதல்.
- நவீன பனை சாகுபடி மற்றம் பனைசார் பொருட்கள் தயாரித்தல் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடையே ஏற்படுத்துதல்.
- பனைக்கான பிரத்தியேக உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பை மேம்படுத்துதல்.

ஏ) நிதி ஒதுக்கீடு: ரூ.1500.00 இலட்சம்

3. மேலே பத்தி.2-இல் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளரது கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, ஆய்வுக்குப் பின், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிக்குளம் வேளாண்மைக் கல்லூரியில் பனை ஆராய்ச்சி நிலையம் அமைப்பது குறித்த அறிவிப்பினை செயல்படுத்த பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:-

i. தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிக்குளம் வேளாண்மைக் கல்லூரியில் பனை ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு ரூ.428.76 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் 2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.255.20 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது; மற்றும்

ii. இந்த மரபணு ஆராய்ச்சி திடலானது உலகளவிலுள்ள அனைத்து பனை வகைகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

| பொருள் | திட்ட மதிப்பீடு (இலட்சங்களில்) | | | |
|---|---|---|---|---|
| | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | மொத்தம் |
| அ. உயரடுக்கு மரபணுவுள்ள பனை கொட்டைகளை சேகரித்தல் மற்றும் வளர்த்தல் | | | | |
| உயரடுக்கு மரபணுவுள்ள பனை மரங்களை கண்டறிந்து குறியீடு செய்வதற்கான ஒப்பந்த அறிவியலாளர்கள் (இரண்டு அறிவியலாளர்கள் மாதத்திற்கு ரூ.20,000/- வீதம்) | 4.80 | 0.00 | 0.00 | 4.80 |
| உழவர்களின் வயலில் உள்ள உயரடுக்கு மரபணுவுள்ள பனைமரங்களை பராமரிக்க ஆகும் செலவு (ஒரு மரத்துக்கு ரூ.2000 வீதம்/ 1000 மரங்கள்) | 20.00 | 20.00 | 20.00 | 60.00 |
| உழவர்கள் வயலில் உள்ள பனை மரத்தில் பனை கொட்டைகளை சேகரிக்க ஆகும் திறன்மிகு கூலியாட்களின் செலவு (நான்கு மாதங்களுக்கு மூன்று திறன்மிகு கூலியாட்கள் மட்டும் மாதத்திற்கு ரூ,12000 வீதம்) | 1.44 | 1.44 | 1.44 | 4.32 |
| ஆராய்ச்சி சம்மந்தமான ஆவணங்களை பதிவு செய்வதற்கான டிஜிட்டல் கருவிகள் | 5.00 | -- | -- | 5.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| போக்குவரத்து செலவுகள், பெட்ரோல், ஆயில் மற்றும் எண்ணெய் செலவுகள் மற்றும் இதர செலவுகள் | 5.00 | 5.00 | 5.00 | 15.00 |
| கூட்டுத்தொகை | 36.24 | 26.44 | 26.44 | 89.12 |

ஆ. பனை மர மரபணு ஆராய்ச்சி திடல் அமைத்தல்

| | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஜெசிபி வண்டியைக் கொண்டு நிலத்தை சீர்திருத்துதல் மற்றும் சமன்படுத்துதல் (ஒரு மணி நேரத்திற்கு ரூ.1000 வாடகை வீதம் 250 மணி நேரம் பயன்பாடு) | 2.22 | ---- | --- | 2.22 |
| பனைமர மரபணு ஆராய்ச்சி திடல் அமைப்பதற்கான நீர்பாசன வசதிகளை ஏற்படுத்துதல் (8x6x1.5m=75000 லிட்டர் கொள்ளளவு) | 2.50 | ----- | --- | 2.50 |
| பனை நடுவதற்கான குழி எடுக்கும் இயந்திரம், பனை மரத்தின் தலைப்பகுதியை சுத்தம் செய்ய ஹைட்ராலிக் சக்தி மூலம் இயந்திரம், வரப்பு அமைக்கும் இயந்திரம், பனை மரம் ஏறும் கருவி மற்றும் பவர் டில்லர் தலா ஒன்று என்ற அளவில் | 50.00 | ---- | ---- | 50.00 |
| சாகுபடி செலவுகள் (இடுபொருட்கள், சாகுபடிக்கான கூலியாட்கள் செலவு மற்றும் 25 ஏக்கரில் மரபணு ஆய்வு திடல் பராமரிப்பு செலவுகள்) | 30.00 | 20.00 | 10.00 | 60.00 |
| கூட்டுத்தொகை | 84.72 | 20.00 | 10.00 | 114.72 |

இ. ஐந்து ஏக்கர் பனை மர தோட்டத்தில் சரியான ஒருங்கிணைந்த பயிர்சாகுபடி முறையை கண்டறிதல்

| | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐந்து ஏக்கர் பனைமர தோட்டத்தில் சரியான ஒருங்கிணைந்த பயிர்சாகுபடி முறையை கண்டறிய ஆகும் செயல்பாட்டு செலவுகள் (பனை மரத்திற்கு நடுவே பயிர்சாகுபடி, கால்நடை வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு) | 5.00 | 10.00 | 10.00 | 25.00 |
| கூட்டுத்தொகை | 5.00 | 10.00 | 10.00 | 25.00 |

..8..

| ஈ.பனை மரத்தில் சரியான பாலின மரத்தை நிர்ணயிக்கும் டி.என்.ஏ குறியீடு கண்டறிதல் | | | | |
|---|---|---|---|---|
| | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | மொத்தம் |
| டி.என்.ஏ குறியீடு கண்டறியும் கருவிகள் (ஆர் - பிசிஆல், ஜெல் ஆவணப்படுத்தும் கருவி, குளிர்சாதன மையவிலக்கு கருவி, மைக்ரோ குழாய், வோர்ட்டேக்சர், வாட்டர் பாத், சேக்கர், நீர் சுத்திகரிக்கும் கருவி, யுவி ஸ்பேக்ட்ரோபோட்டோமீட்டர், ஆய்வக பேஞ்ச் மற்றும் பதிவு செய்யும் கருவிகள்) | 60.00 | -- | -- | 60.00 |
| மற்ற வேதியியல் இடுபொருட்கள் மற்றும் இதர ஆய்வக செலவுகள் | 10.00 | 10.00 | 10.00 | 30.00 |
| ஆராய்ச்சி பணிக்கான செலவுகள் (மாதத்திற்கு ரூ.31,000 வீதம் இரண்டு முதுநிலை ஆராய்ச்சியாளர்கள்) | 7.44 | 7.44 | 7.44 | 22.32 |
| கூட்டுத்தொகை | 77.44 | 17.44 | 17.44 | 112.32 |

| உ . வருடத்திற்கு ஒரு இலட்சம் பனை கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்வதை உறுதி செய்தல் | | | | |
|---|---|---|---|---|
| | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | மொத்தம் |
| உயர்தொழில்நுட்ப பனை நாற்று பண்ணை அமைப்பதற்கு நிலத்தை தயார் செய்ய ஆகும் செலவு (ஜெசிபி ஒரு மணி நேரத்திற்கு ரூ.1000 வீதம் 100 மணி நேர வாடகை செலவு) | 1.00 | -- | -- | 1.00 |
| வெளி வயல்களில் பனை மர கன்றுகள் கடினப்படுத்த மற்றும் களை வளராமல் இருக்க நில போர்வை இரண்டு ஏக்கரில் அமைக்கும் செலவு (ஒரு ஏக்கருக்கு ரூ.5 இலட்சம்) | 10.00 | -- | -- | 10.00 |
| இடுபொருட்கள் செலவுகள் / பாலிதீன் பைகள், உணவு ஊடக செலவுகள் மற்றும் ஊட்டச்சத்துகள் (ஆண்டுக்கு ரூ.10 இலட்சங்கள்) | 10.00 | 10.00 | 10.00 | 30.00 |
| செயல்படுத்தும் செலவுகள் கூலியாட்கள் செலவு உட்பட | -- | -- | -- | -- |
| கூட்டுத்தொகை | 21.00 | 10.00 | 10.00 | 41.00 |

..9..

| ஊ. பனை மரம் ஏறும் கருவியை வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி செய்தல் | | | | |
|---|---|---|---|---|
| | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | மொத்தம் |
| பனை மரம் ஏறும் கருவியை வடிவமைக்க மற்றும் உற்பத்தி செய்ய பயன்படும் பண்ணை இயந்திரங்கள் / லத்தி, துளையிடும் கருவி, வெல்டிங் கருவி, வெட்டும் கருவி, வளைக்கும் கருவி, அரைக்கும் கருவி, மரம் வெட்டும் கருவி, கை மூலம் துளையிடும் கருவி | 15.00 | -- | -- | 15.00 |
| பனை மரம் ஏறும் கருவியை வடிவமைக்க மற்றும் உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் செலவு. | 5.00 | 5.00 | -- | 10.00 |
| பனை மரம் ஏறும் கருவியை வடிவமைக்க மற்றும் உற்பத்தி செய்ய திறன்மிகு ஒப்பந்த கூலியாட்களுக்கான கூலி (12 மாதத்திற்கு நான்கு திறன்மிகு கூலியாட்கள் வீதம் நாள் ஒன்றுக்கு ரூ.750 கூலி) | 10.80 | 10.80 | -- | 21.60 |
| கூட்டுத்தொகை | 30.80 | 15.80 | -- | 46.60 |
| மொத்த கூட்டுத்தொகை | 255.20 | 99.68 | 73.88 | 428.76 |

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2415- வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் -01. பயிர் வளர்ப்பு-120-ஏனைய நிறுவனங்களுக்கு நிதி உதவி – மாநிலச் செலவினங்கள் – AM. கிள்ளிக்குளம் வேளாண்மைக் கல்லூரி – பனை மற்றும் வாழை ஆராய்ச்சி – 309 - உதவித் தொகை – 07 - ஆராய்ச்சி.

(IFHRMS த.தொ.கு.2415 01120 AM 309 07) – ரூ.255.20 இலட்சம்

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கிட வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.28091/2023, நாள் 28.07.2023 -இல் வழங்கிய ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003.
வேளாண்மை இயக்குநர், சென்னை-600 005.
வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர்-641 003.
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA/ E&RSA), சென்னை-600 018
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர்-641 018.
துணை இயக்குநர், உள் தணிக்கை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்- 641 003.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை-600 009.

நகல்:-
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை-600 009.
நிதித் (வேளாண்மை - உ ந) துறை, சென்னை-600 009.
வேளாண்மை – உழவர் நலத் (அ.ந.மு.3) துறை, சென்னை-600 009.
கோ.எண்.1391/பக/2023.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/07/2023
பிரிவு அலுவலர்

31/7/2023